**செய்தி வெளியீடு எண்: 754** **நாள்: 22.10.2018**

## <u>செய்தி வெளியீடு</u>

துபாயிலுள்ள கட்டுமான நிறுவனத்திற்க்கு இரண்டு வருட பணி அனுபவத்துடன் 27 முதல் 45 வயது வரையுள்ள கொத்தனார்கள், ப்லாஸ்டரிங் மெஷின்ஆப்ரேட்டர்கள், சென்டிரிங் கார்ப்பென்டர்கள் மற்றும் போர்மென்கள் தேவைப்படுகிறார்கள். வேலை சம்மந்தப்பட்ட விவரங்கள் இந்நிறுவன வலைதளத்தில் www.omcmanpower.com அறிந்து கொள்ளலாம்.

கொத்தனார்கள், ப்லாஸ்டரிங் மெஷின்ஆப்ரேட்டர்கள், சென்டிரிங் கார்ப்பென்டர்களுக்கு ரூ. 24,000/- முதல் 30,000/- மாத ஊதியமும், போர்மென்களுக்கு ரூ.40,000/- மாத ஊதியமும் வழங்கப்படும்.

தேர்ந்தேடுக்கப்படுபவர்களுக்கு, இலவச இருப்பிடம் மற்றும் அந்நாட்டின் சட்டதிட்டத்திற்குட்பட்ட இதர சலுகைகள் வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

கொத்தனார்கள், ப்லாஸ்டரிங் மெஷின்ஆப்ரேட்டர்கள், சென்டிரிங் கார்ப்பென்டர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி அல்லது ECNR பாஸ்போர்ட் வைத்திருத்தல் வேண்டும்.

போர்மென் வேலைக்கு டிப்ளோமோ சிவில் தேர்ச்சி மற்றும் வளைகுடா நாட்டில் பணிபுரிந்த அனுபவம் இருக்க வேண்டும்.

உரிய தகுதி மற்றும் விருப்பம் உள்ள வேலைநாடுநர்கள், தங்களின் சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வித்தகுதி, அனுபவம், செல்லத்தக்க பாஸ்போர்ட் ஆகியவற்றின் நகல்கள் மற்றும் இரண்டு புகைப்படத்துடன், 28.10.2018 (ஞாயிற்றுக்கிழமை) அன்று மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் கே. புதூர் மதுரையில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை நடைபெறும் முதற் கட்ட நேர்காணலில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் .

மேலும் விவரங்களுக்கு 22505886/22502267/8220634389/ 9566239685 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

இந்திய அரசின் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான விவகார அமைச்சகத்தால் வழங்கப்பட்ட அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் முகவர் எண். RC No. B-0821/CHENNAI/CORPN/1000+/5/308/84 ஆகும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**